AG&P பிரதம் தனது முதல் இரு CNG நிலையத்தை ராமநாதபுரத்தில் துவங்குகிறது

நகர்புற மற்றும் கிராமப்புற மக்களுக்கு இப்போது சுத்தமான மற்றும் குறைந்த விலை எரிபொருள் பெறும் வசதி கிடைத்துள்ளது

ராமநாதபுரம், 3 டிசம்பர் 2020: உலகளாவிய டவுன்ஸ்ட்ரீம் LNG மற்றும் எரிவாயு லாஜிஸ்டிக்ஸ் நிறுவனமான AG&P, தமிழகத்தில் அழுத்தமேற்றப்பட்ட இயற்கை எரிவாயு (CNG) நிலையத்தை, AG&P பிரதம் என்ற பெயரில், ராமநாதபுரம், ராமேஸ்வரம், செம்மடம் HPCLயலிலும் மற்றும் ராமநாதபுரம் மண்டபம் ரோடு GSM மால் அருகில் உள்ள IOCLயலிலும் திறந்துள்ளது. பசுமையான மற்றும் அறிவார்ந்த (Smart) எரிபொருட்களுக்கு மாறுவதற்கான அரசாங்கத்தின் நோக்கத்தை ஈடேற்றுவதை இலக்காகக் கொண்டுள்ள AG&P பிரதம் நிலையம், கார்கள், ஆட்டோ ரிக்ஷாக்கள், பேருந்துகள் மற்றும் லாரிகள் போன்ற கனரக போக்குவரத்து வாகனங்களுக்கு, CNG பெறும் வசதியை முதன்முறையாக வழங்கவுள்ளது

வாகன உரிமையாளர்களுக்கு சிறந்த பொருளாதாரத்தை CNG சாத்தியமாக்குகிறது. CNG என்பது பெட்ரோல் மற்றும் டீசலுடன் ஒப்பிடும்போது கணிசமாக குறைந்த விலையில் கிடைக்கும் எரிபொருளாகும். CNG வாகன உரிமையாளர்களுக்கு கணிசமான சேமிப்பை உருவாக்க உதவுகிறது, ஏனெனில் இது குறிப்பிடத்தக்க மைலேஜ், பராமரிப்பு செலவுகளில் குறைப்பு மற்றும் சிறந்த செயல்திறனை வழங்குகிறது.

பெட்ரோல் விலை லிட்டருக்கு 80 - 90 ரூபாய்க்கும் மற்றும் லிட்டருக்கு 14 -17 கி.மீ மைலேஜ் அதில் கிடைக்கிறது. CNG விலை கிலோவுக்கு ரூ.50 முதல் 60 வரை இருக்கும், CNG எரிபொருள் கொண்ட கார் ஒரு கிலோவுக்கு 20 - 25 கி.மீ வரை மைலேஜை வழங்குகிறது. இது பெட்ரோல் கார்களுடன் ஒப்பிடும்போது 30-35% அதிகமாகும். குறைந்த பராமரிப்பு செலவுகளுக்கு மேலதிகமாக தினசரி எரிபொருள் நிரப்புவதில் கிடைக்கும் சேமிப்புடன், பயணிக்கும் கிலோமீட்டர்களைப் பொறுத்து, வாகன உரிமையாளர்களுக்கு ஒவ்வொரு வாரமும் சுமார் 2,000 - 3,000 ரூபாய் வரை சேமிக்கலாம். ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் மற்றும் ஏசி, ஏசி அல்லாத கார் மாடல்கள் இரண்டிற்குமான கார் மற்றும் வாடகைக்கார் உரிமையாளர்கள், பெட்ரோலிலிருந்து CNGக்கு மாறிய பின்னர் அவர்களின் சேமிப்பில் 55% அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கின்றனர் மேலும், ஏனைய எரிபொருட்களை விட CNG பாதுகாப்பானது. இது சிறந்த பாதுகாப்பு திறனை கொண்டுள்ளது, ஏனெனில் அதன் நச்சு அல்லாத மற்றும் காற்றை விட இலகுவான தரம்

இதை ஆவியாக்குவதால், தீ அபாயமும் குறைகிறது. மேலும், இது சூழல் மாசுபாடுகளையும் உண்டாக்காது.

தமிழகத்தின் ராமநாதபுரத்தில் திறக்கப்பட்டுள்ள, முதல் இரு CNG நிலையங்களின் திறப்பு விழாவில் பேசிய ராஜஸ்தான், தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசத்தின், தலைமை இயக்க அலுவலரும் மற்றும் தொழில்நுட்ப சேவைகளின் தலைவருமான திரு.மணீஷ் கோஸ்வாமி அவர்கள்: “AG&P பிரதமின்  முதல் இரு CNG நிலையங்களை ராமநாதபுரம் மற்றும் ராமேஸ்வரத்தில் திறக்கப்படுவதை அறிவிப்பதில் பெருமிதம்கொள்கிறோம். CNG உள்கட்டமைப்பை தமிழ்நாட்டின் கிராமப்புற மக்களுக்கு கொண்டு வருவதில் HPCL, IOCL மற்றும் BPCL மற்றும் உள்ளூர் அதிகாரிகள் வழங்கிய மதிப்புமிக்க ஆதரவுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். எங்களது CNG நிலையங்கள் தமிழ்நாட்டில் உள்ள வாகன உரிமையாளர்களுக்கு இந்த பொருளாதார ரீதியில் சிக்கனமான எரிபொருளை எளிதில் கிடைப்பதை உறுதி செய்யும். எங்கள் AG&P பிரதம் CNG நிலையங்கள் மதுரை மற்றும் ராமேஸ்வரம் இடையே ஒரு ‘சுத்தமான மற்றும் பசுமையான’ பாதையை அமைக்கும், இது சுற்றுலாப் பயணிகளுக்கான பிரபலமான யாத்திரை பாதையாகத் திகழ்வது, சுற்றுச்சூழல் சுற்றுலாவையும் மேம்படுத்தும். அதே நேரத்தில் மாசுபாட்டைக் குறைக்கவும் காற்றின் தரத்தை மேம்படுத்தவும் உதவும். தூய்மையான சமூகங்களை உருவாக்க CNG-எரிபொருள் கொண்ட வாகனங்களுக்கு மாறுவது அதிகரிக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்” என்று கூறினார்.

இந்த வருட இறுதிக்குள் மற்றும் ஒரு CNG நிலையத்தை ராமநாதபுரம் ECR சந்திப்பு அருகில் உள்ள BPCL நிலையத்திலும் திறக்கவுள்ளோம்

உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், தொழில்மயமாக்கலை விரைவுபடுத்துதல், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துதல் மற்றும் ஒட்டுமொத்தமாக, கோடிக் கணக்கான இந்திய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு நாடு முழுவதும் நகர எரிவாயு விநியோக திட்டங்களை செயல்படுத்த, கிராமப்புறங்களின் வளர்ச்சி அரசாங்கத்தின் முக்கிய கூர்நோக்கமாக உள்ளது. பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியம் (PNGRB) அடுத்த 25 ஆண்டுகளுக்கு ராமநாதபுரம் மாவட்டத்தில் நகர எரிவாயு விநியோக உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்கான பிரத்யேக உரிமைகளை AG&P நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. இதில் வாகனங்களுக்கு CNG வழங்குவதையும், குடியிருப்பு, தொழில்துறை மற்றும் வணிக பயன்பாட்டிற்கு குழாய் இயற்கை எரிவாயு (PNG) வழங்குதலும் உட்படும்.

தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, ராஜஸ்தான் ஆகிய 31 மாவட்டங்களில் அன்றாட பயன்பாட்டிற்கு பிரத்யேகமாக இயற்கை எரிவாயுவை வழங்குவதற்காக PNGRB வழங்கிய 12 நகர்ப்புற எரிவாயு வினியோக (CGD) உரிமங்களை AG&P வைத்திருக்கிறது. இந்த பிரத்யேக உரிமைகள் வீடுகள், தொழில்துறை, வணிகங்கள், வணிகரீதியான மற்றும் வணிகம்-சாராத விலக்கு வணிக (NDEC) நிறுவனங்கள் மற்றும் வாகனங்களில் பயன்படுத்தப்படும் CNG ஆகியவைகளுக்குப் பொருந்தும். AG&P பிரதம் என்ற தர அடையாளப் பெயரில், நகர்ப்புற எரிவாயு வினியோக நிறுவனம் (CGD) முழுமையாக செயல்படும் போது 278,000 சதுர கிலோமீட்டர் அளவிற்கு, 17,000 அங்குல-கிமீ குழாய் மற்றும் 1,500 க்கும் மேற்பட்ட புதிய CNG நிலையங்கள் உருவாக்கப்பட்டிருக்கும்.

#முடிவுற்றது#
ஏஜி & பி பிரதம் குறித்து

இந்தியாவின் AG&P பிரதம், சிங்கப்பூரைச் சேர்ந்த AG&P குழுமத்தின் நகர்புற எரிவாயு விநியோகப் (CGD) பிரிவு ஆகும், இது ஒரு முன்னணி டவுன்ஸ்ட்ரீம் LNG மற்றும் எரிவாயு லாஜிஸ்டிக்ஸ் நிறுவனமாகும். LNG மற்றும் இயற்கை எரிவாயுவை எங்கள் முனையங்களில் இருந்து மின்சாரம், தொழில்துறை, வணிக, உள்நாட்டு மற்றும் போக்குவரத்து துறைகளில் செயலாற்றும் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு நாங்கள் விநியோகிக்கிறோம். ஆரோக்கியமான வாழ்க்கைக்கு தூய்மையான காற்றை உறுதி செய்யும் அதே வேளையில், எங்கள் வாடிக்கையாளர்களுக்கு அதிக வணிகம், அதிக லாபம் மற்றும் அதிக சேமிப்புகளை உருவாக்கவும் நாங்கள் உதவுகிறோம்.

ராஜஸ்தான், ஆந்திரா, தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் கேரளாவில் உள்ள 31 மாவட்டங்களில் அன்றாட பயன்பாட்டிற்கு பிரத்யேகமாக இயற்கை எரிவாயுவை வழங்குவதற்காக பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியம் (PNGRB) வழங்கிய 12 நகர்ப்புற எரிவாயு வினியோக (CGD) உரிமங்களை AG&P வைத்திருக்கிறது. இந்த பிரத்யேக உரிமைகள் வீடுகள், தொழில்துறை, வணிகங்கள், வணிகரீதியான மற்றும் வணிகம்-சாராத விலக்கு வணிக (NDEC) நிறுவனங்கள் மற்றும் வாகனங்களில் பயன்படுத்தப்படும் CNG ஆகியவைகளுக்குப் பொருந்தும். AG&P பிரதம் என்ற தர அடையாளப் பெயரில், நகர்ப்புற எரிவாயு வினியோக நிறுவனம் (CGD) முழுமையாக செயல்படும் போது 278,000 சதுர கிலோமீட்டர் அளவிற்கு, 17,000 அங்குல-கிமீ குழாய் மற்றும் 1,500 க்கும் மேற்பட்ட புதிய CNG நிலையங்கள் உருவாக்கப்பட்டிருக்கும்.

மேலும் அறிய, www.agppratham.com ஐப் பார்வையிட்டு AG&P Pratham இன் அதிகாரப்பூர்வ சமூக ஊடக பக்கங்களைப் பின்பற்றவும்:

www.linkedin.com/company/ag-p-pratham/
www.facebook.com/agppratham/
www.instagram.com/agppratham/

ஊடக தொடர்புகள்:

MSL இந்தியா
சரோஜினி உஜ்லயன்
மூத்த மேலாளர்
+ 91 9810006148
sarojini.ujlayan@mslgroup.com